மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் மறைந்த முன்னாள் சட்டப்பேரவை தலைவர் பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன் அவர்களின் 94வது பிறந்த தினத்தை முன்னிட்டு அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தலைமையில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் வ.வேலுசாமி, பெ.குழந்தை வேலு, எம்.ஜெயராம், அக்ரி கணேசன், மூவேந்திரன், , சௌந்தர்ராஜன், பி.கே.செந்தில், சரவணன், புண்ணிய மூர்த்தி, சு.பா. கண்ணன், நீலமேகம், எஸ்.எஸ்.மாறன், ஏ.கே.ஆறுமுகம், முத்து கணேசன், மணிமாறன், மிசா பாண்டியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் திரளாக பங்கேற்றனர்.

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்டப் பொருளாளர் ஷெரீப் ஏற்பாட்டில் வடகரை அன்பு ஆசிரமத்தில் மதிய உணவை தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் வழங்கி துவக்கி வைத்தார். நிகழ்வில் கழக நிர்வாகிகள் திவான் ஒலி, ஆறுமுகச்சாமி,கென்னடி,கனிமொழி, ரஹீம்,சாமிதுரை,தமிழ்ச்செல்வி, அழகு சுந்தரம், வெங்கடேசன், சுடலை, காசிராஜன் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

தென்காசி மாவட்டத்திற்கு கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வருகையை முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. ஒன்றிய,நகர நிர்வாகிகள் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகத்தில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் வல்லம் திவான் ஒலி, அழகுசுந்தரம், வீராணம் சேக்முகமது, அன்பழகன், ஜெயா,சுரேஷ்,நகர செயலாளர்கள் சாதிர்,வெங்கடேசன்,அப்பாஸ், பீரப்பா,கணேசன்,பேரூர் செயலாளர் கள் மேலகரம் சுடலை, குற்றாலம் குட்டி, இலஞ்சி முத்தையா, கோபால்,வெள்ளத்துரை,தங்கப்பா, முத்து உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் கோ.சுப்பையா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சீனிவாசன், பரமகுரு,மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் செண்பக விநாயகம்,மாவட்ட பொருளாளர் இல.சரவணன்,துணை செயலாளர் மனோகரன்,நகர செயலாளர் பிரகாஷ் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

தென்காசி தெற்கு மாவட்டம் கடையநல்லூர் நகராட்சி 7 மற்றும் 8 வது வார்டு கிருஷ்ணாபுரத்தில் வடக்கு நகர தி.மு.க சார்பில் பாகம் எண்கள் 205, 214, 215, 203, 204, 206 பூத்துகளில் வீடு வீடாகச் சென்று வெல்லும் தமிழ் பெண்கள் பரப்புரை கூட்டம் கடையநல்லூர் வடக்கு நகர செயலாளர் அப்பாஸ் தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் முன்னாள் மாவட்ட பொறுப்பாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.செல்லத்துரை பங்கேற்று கழக அரசின் சாதனைகள் குறித்த துண்டு பிரசுரங்களை வழங்கி துவக்கி வைத்தார்.நிகழ்ச்சியில் விவசாய அணி அமைப்பாளர் முருகன்,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஐவேந்திரன் தினேஷ்,கவுன்சிலர்கள் சிட்டி திவான் மைதீன், தனலட்சுமி, மாலதி,ஒன்றிய கவுன்சிலர் பகவதியப்பன்,நகர துணை செயலாளர் காசி,கல்யாணி, கமலா, மகளிர் அணி மணிமேகலை, மாரியம்மாள்,சக்கியம்மாள், கற்பகவல்லி,செந்தாமரை, கிருஷ்ணம்மாள்,கலா,லட்சுமி, பிச்சம்மாள்,ஜோதி,சுசீலா,மூப்பம்மாள் மலர் பொன்னுத்தாய்,பவானி,பிரேமா காசி,ராஜேஸ்வரி,பூங்கொடி, அன்னலட்சுமி,வசந்தா,கௌசல்யா, காளியம்மாள்,கீதா,ரதிபாலாஜி, பாப்பா,ராமலட்சுமி,குமாரி,முத்துமாரி, மல்லிகா, பார்வதி,காந்தி,மூக்கம்மாள், முத்துமாரி,கோமு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், அருங்குளம் கிராமத்தில் ரூ.17.25 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி.மார்க்கண்டேயன் திறந்து வைத்தார்.நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தங்கவேல், ரஞ்சித், ஒன்றிய செயலாளர்கள் அன்புராஜன், ராமசுப்பு, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் "தமிழ்நாடு தலைகுனியாது மாபெரும் பொதுக்கூட்டம் பாளை பேருந்து நிலையம் ஜோதிபுரம் மைதானத்தில் அயலக அணி மகா கிப்ட்சன் தலைமையில் பகுதி பொறுப்பாளர்கள் செய்யது மைதீன், செல்லத்துரை,துபை சாகுல் ஹமீது ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் தினேஷ் வரவேற்புரையாற்றினார். இந்நிகழ்வில் கழக அயலக அணி செயலாளர் முன்னாள் எம்.பி எம்.எம்.அப்துல்லா பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம். எல்.ஏ.மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

அரசு அச்சக தொ.மு.ச. சார்பில் முதல்வர் பிறந்தநாள் விழா!

சென்னை, மார்ச் 4 - அரசு அச்சக தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் அரசு ஊழியர்களின் வாழ்வில் ஒளியேற்றி நீண்ட நெடுநாட்களாக வழங்கப்படாமல் இருந்த ஈட்டிய விடுப்பினை சரண் செய்வது மற்றும் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக எட்டாக் கனியாக இருந்த பழைய ஓய்வூதிய திட்டத்தினை - டேப்ஸ் ஓய்வூதிய திட்டமாக அறிவித்த தமிழக முதல்வர், கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு அரசு மைய அச்சக தலைவாயிலில் 2.3.2026 அன்று, அரசு அச்சக தொ.மு.ச. பொதுச் செயலாளர் ச.உ.பிரபாகர் தலைமையில் 500 நபர்களுக்கு உணவளித்து அச்சக தொழிலாளர் மற்றும் பொதுமக்கள் 1000 நபர்களுக்கு இனிப்புகள் வழங்கியும் கொண்டாடப்பட்டது.

தலைவர் பிறந்தநாள் விழாவினை மதுரை கிளை அச்சக தொ.மு.ச. செயலாளர் ரவிச்சந்திரன், தலைவர் செல்வக்குமார் தலைமையிலும், சேலம் கிளை அச்சக தொ.மு.ச. செயலாளர் சரண்ராஜ், தலைவர் முத்துமணி தலைமையிலும் விருத்தாச்சலம் கிளை அச்சக தொ.மு.ச. செயலாளர் வேல்முருகன், தலைவர் லோகநாதன் தலைமையிலும், 200 வெல்வோம் மீண்டும் தமிழகத்தின் முதல்வராக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களே தொடரவும் சபதமேற்று சிறப்பாக கொண்டாடப்பட்டது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மிசா என். இராமசாமி

மார்ச் 4 (2022)

தனது இளம் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

தஞ்சை நகரத்தில் வட்ட பிரதிநிதி, வட்டக் கழகச் செயலாளர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

1962ம் ஆண்டு தஞ்சை சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற தேர்தலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் போட்டியிட்டபோது, வாக்குச் சாவடி முகவராக பணியாற்றியவர்.

1976 நெருக்கடி காலத்தில் 'ஜனநாயக கொலைகாரி இந்திரா ஒழிக' என வாசகத்தை சுவர்களில் எழுதியதால், உள்நாட்டு தேசிய பாதுகாப்பு (மிசா) சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் ஒன்பது மாதம் தனிமை சிறைவாசம் அனுபவித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.